1991 அக்டோபர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வேறு, பரம்பிக் குளம்-ஆளியாறு பற்றி கேட்டால் அவர் பதில் சொல்லமுடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இல்லை, இல்லை, ஆனைமலைப் பகுதி பக்கம்தான்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அந்த பரம்பிக்குளம் மீது தண்ணீரை எடுத்து வருகின்ற காண்டூர் கேனாலுடைய அளவு மிகவும் குறைவாக இருப்பதால், திருமூர்த்தி மலைக்கு தண்ணீர் வர முடிவதில்லை அதற்காக இந்த நல்லாறிலே வால்பாறை பகுதியில் உற்பத்தியாகின்ற அந்த நல்லாற்றிலே ஒரு அணையைக் கட்டினால் திருமூர்த்தி மலைக்கு தண்ணீரைக் கொண்டு வருவதற்கு வேறு வழி ஏற்படுத்தப்படும். அப்படி ஏற்படுத்து கின்றபோது, இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் 4 மண்டலங்களாக பிரிகின்ற அரசின் யோசனைக்கு ஏற்ப, அது 90 ஆயிரம் ஏக்கர்களுக்கு அதிகமாக தண்ணீர் பாயக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது.

எனவே அந்த நல்லாறு திட்டத்தை வால்பாறை பகுதியிலே இருக்கின்ற நல்லாறறிலேயிருந்து தண்ணீரை நேரடியாகவே திருமூர்த்தி மலைக்குத் திருப்பி விடுவதற்கு விரைவாக நட வடிக்கையை எடுத்தால் பரம்பிக்குளம் பாசன விவசாயிகள் அனைவருக்குமே அது பயனுள்ளதாக இருக்கும். அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து விரைவிலே முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாறறின் குறுக்கே அணை கட்டி திருமூர்த்தி மலைக்கு கொண்டு வருகின்ற திட்டம் நம்முடைய விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடிய திட்டமாக இருக்குமேயானால் உடனடியாக இந்த அரசு அதை ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 147. திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

147—
*248— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், க. பரமத்தி, அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமங்களுக்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் க. பரமத்தி ஒன்றியத்திலிருந்து 327 குடியிருப்புகளும், அரவாக்குறிச்சி ஒன்றியத்திலிருந்து 229 குடியிருப்புகளும், கரூர் ஒன்றியத்திலிருந்து 8 குடியிருப்புகளும் மற்றும் அரவாக்குறிச்சி பள்ளப்பட்டி ஆகிய இரு பேரூராட்சிகளும் பயன்பெறும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் மேற்கு ஆரணி வட்டாரக் கிளையின் தமிழ்நாடு கூட்டணி ஆசிரியர்கள் கோரிக்கையின் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.